1971 ஜூலை 17]

திரு. என். கணபதி: தொழிலாளர்கள் தகராறு பிரச்சினையில் அவர்கள் வன்முறையில் இறங்குகிற நேரத்தில் முதலாளிகளுக்கு—மானேஜ்மெண்டுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதை அரசு அறியுமா? அதை அமுல்படுத்துகிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வன்முறையில் யார் ஈடுபட்டாலும் காப்பாற்றப்படவேண்டியவர்களுக்கு அரசு பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கும்.

Report on Police Firing at Tenkasi

* 279. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be Pleased to place on the table of the House the report of the inspector-General of Police on the Tenkasi incidents resulting in police firing about the 27th September 1970.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 1970-ம் வருடம் செப்டம்பர் மாதம் 26-ம் தேதி அன்று தென் காசியில் நடந்த துப்பாக்கிச் சுடல் குறித்து நீதி விசாரணை செய்வதற்காக விசாரணை ஆணைக் குழு ஒன்றினை அரசு நியமித்து உள்ளதால், இது தொடர்பான தனிப்பட்ட அறிக்கை எதுவும் சென்னை காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்து பெறப்படவில்லை.

திரு. பெ. மலைச்சாமி: 1966-வது ஆண்டுவரை பலதரப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக்கின்றனவே, அப்போதிருந்த அரசு அவை ஒவ்வொன்றுக்கும் விசாரணைக் குழு அமைத்ததா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1970-ம் வருடம் செப்டம்பர் 26-ஆம் தேதி நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றி விசாரிக்க ஜட்ஜ் வரதராஜன் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டதே, அந்த ரிப்போர்ட் சபையில் வைக்கப்படுமா? இதுபோன்ற விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட்டுகள் எல்லாம் சபையில் வைக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதுபோன்ற விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட்டுகள் எல்லாம் சபையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குழுவின் அறிக்கையையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அரசு ஆராய்ந்த பிறகு இந்த அவையிலும் வைக்கும்.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, பழைய காலங்களில் நடைபெறுகின்ற துப்பாக்கிப் பிரயோகங்களில் 'ஷூட் டு ஸ்கேர்' என்ற தத்துவம் இருந்தது. அதாவது கூட்டத்தைக் கலைப்பதற்காகத்தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதன் நோக்கமா

யிருந்தது. 1967-க்கு முன்னால் அது 'ஷூட் டு கில்' என்ற அளவில் மாற்றியமைக்கப்பட்டதே, இப்போது ஏதாவது மாற்றியமைப்ப தற்கான எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சொல் அப்படி இருந்தாலும் பயன்படுத்துகிற முறைகள் கூடுமான வரையில் மனிதாபிமான உணர்ச்சியுள்ள முறையில் இருக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்பி, அந்த நிலையில் நடைபெற்று வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, துப்பாக்கிச்சூட்டினால் உயிர் இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு ஏதாவது கொடுத்திருக்கிறதா? அதுமாதிரி ஊனமடைந்தவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, துப்பாக்கிச் சூட்டினால் குருசாமி முதலியார் என்கிற ஒருவர் மரணமடைந்தார். அவருடைய மனைவிக்கு முதலமைச்சர் பொதுநல நிதியிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, துப்பாக்கிப் பிரயோகங்கள் சில சந்தர்ப்பங்களில் தேவைப்பட்டோ, தேவையில்லாமலோ நடந்துவிடுகின்றன. ஒவ்வொரு துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும்போதும் அது சரியானதா, அல்லவா என்பதைப் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக நீதி விசாரணையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் துப்பாக்கிப் பிரயோகங்களில் நீதிவிசாரணை நடத்துவதற்கு ஒவ்வொரு தடவையும் வழிவகை செய்திருக்கிறது. தென்காசி துப்பாக்கிப் பிரயோகத்திலும் நீதி விசாரணை நடத்தப்பட்டு அறிக்கையும் சபைமுன் வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

கோணிப் பைகள் தொழில்

*287. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் தற்போது கோணிப்பைகள் செய்யும் தொழிற் சாலைகள் நிறுவிட ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.